கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

சட்ட பீடம்

சட்டமாணிப் பரீட்சை, வருடம் III – 2018/2019

# கடல்ச் சட்டம்

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 07

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்)

---

1. '1982ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் கடல்ச் சட்டம் தொடர்பான சமவாயமானது முழுமையற்ற ஆவணமொன்றாகவும், பல்வேறு முக்கிய விடயங்களை தெளிவற்றதாகவும் தீர்க்கப்படாதவையாகவும் அது விட்டுச்சென்றுள்ளது. சமுத்திரங்களையும் அவற்றினது மூலவளங்களையும் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவருவதற்கான அடுத்த உலகப் போரானது இடம்பெறலாம் என்பது வெளிப்படையாகப் புலப்படுவதனால், இச்சமவாயமாளது இழந்ததொரு சந்தர்ப்பமாகக் கருதப்படுகின்றது.'

   முக்கிய அரசியல் பிரமுகரொருவர் இக்கூற்றினை அண்மையில் தெரிவித்துள்ளார். மேலுள்ள கூற்றுக்கு நுணுக்கமாகப் பதிலளிக்கும் வகையில் சுருக்கமானதொரு கட்டுரையினை தயார் செய்க. கடல்ச் சட்டஞ்சார் உமது அறிவினை உறுதிப்படுத்தும் வகையில் இக்கட்டுரையினை எழுதுக.

2. லூமினா என்ற அரசானது அதன் மேற்கு கரையோரத்துக்கப்பால் ஒரு தொடரான செயற்கைத் தீவுகளை நிர்மாணிக்கும் செயன்முறையில் ஈடுபட்டுவருவதுடன், அதனது கடல் வலயங்கள்சார் சட்டத்தையும் புனராய்வு செய்கின்றது. பின்வரும் ஏற்பாடுகளைக் குறிப்பாகக் கொண்டதான ஆள்புலக்கடல் மற்றும் பிரத்தியேக பொருளாதார வலயம் தொடர்பான வரைவுச் சட்டமூலமானது பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு வருகின்றன.

   அ. லூமினாவினது ஆள்புலக்கடலின் அகலத்தை அளப்பதற்கு 'நேர்நிலையான அடிப்படைக் கோடுகள்' பயன்படுத்தப்படும் என்று பிரிவு 6 குறிப்பிடுகின்றது.

   ஆ. லூமினாவினது இயற்கை மற்றும் செயற்கைத் தீவுகளானவை அவற்றினது சொந்த பிரத்தியேக பொருளாதார வலயத்தையும் கண்டமேடையினையும் கொண்டிருக்கும் என்று பிரிவு 15 குறிப்பிடுகின்றது.

   இ. லூமினாவின் ஆள்புலக்கடல் மற்றும் பிரத்தியேக பொருளாதார வலயம் என்பவற்றில் அதன் சட்டங்களை மீறுகின்ற வகையில் எந்தவொரு கப்பலாவது குற்றமொன்றைப் புரிகின்றபோது, ஆள்கடலிலும் அவசியமேற்படின் மற்றைய அரசுகளின் ஆள்புலக் கடலிற்குள்ளும், அக்கப்பலைத் துரத்திச்செல்லவும் கைதுசெய்யவும் லூமினாவினது அதிகார அமைப்புகளுக்கு உரிமையுண்டு என்பதாக பிரிவு 18 குறிப்பிடுகின்றது.

ஈ. அதன் பிரத்தியேகப் பொருளாதார வலயத்திற்கு மேலான 200 கடல்மைல் கொண்ட பிரத்தியேகமான வான்பரப்பு வலயமொன்றை பிரிவு 25 கோருகின்றது.

1982ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் கடல்ச் சட்டம் தொடர்பான சமவாயத்தை லூமினா ஏற்றங்கீகரித்துள்ளது என்று கருதிக்கொள்க. மேலுள்ள உத்தேச சட்டமூலத்தின் வரைவிலுள்ள சட்ட ஏற்பாடுகள் சமவாயம் உள்ளடக்கியுள்ள சர்வதேச தராதரங்களுடன் இணங்கிச் செல்கின்றதா?

3. தேசினி மற்றும் சாலலாந்து ஆகிய அரசுகளானவை 'கோலா விரிகுடா' என்ற பெயருடைய கடற்பிரதேசத்திலுள்ள அயல்நாடுகளாகும் என்பதுடன், 1982ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் கடல்ச் சட்டம் தொடர்பான சமவாயத்தை இரண்டு அரசுகளும் ஏற்றங்கீகரித்துள்ளன. கோலா விரிகுடாவிற்குள்ளான 500 கடல்மைல்களுக்கும் அதிகமான பரப்பைக் கொண்டதொரு கண்டமேடைப்பகுதியை அதன் அடிப்படைக்கோட்டிலிருந்து சாலலாந்து அண்மையில் கோரியுள்ளது. 1982ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் கடல்ச் சட்டம் தொடர்பான சமவாயத்தின் ஏற்பாடுகளை பிரயோகிக்கவில்லை என்பதாகவும், மாறாக தேசினியினது கண்டமேடையின் ஒரு பகுதியையும் அது எடுத்துக்கொண்டுள்ளதாகவும் பிரகடனஞ்செய்ததுடன், சாலலாந்துவினது கண்டமேடைக் கோரிக்கைக்கு தேசினி ஆட்சேபனை தெரிவித்துள்ளது. இப்பிரச்சனையினை சர்வதேச நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்வதற்கு தேசினி திட்டமிடுகின்றது.

இச்சமவாயத்தின்கீழ் பெரும்பகுதி கண்டமேடைப் பரப்பைக் கோருவது தனக்கு நெறிமுறையானது என்ற சாத்தியமுள்ளதாகவும், எது எவ்வாறிருப்பினும் இச்சமவாயத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்டதன் பிரகாரம், கோலா விரிகுடாவில் 'வரலாற்று உரிமைகள்' தனக்கு உள்ளதாகவும் சாலலாந்து தெரிவிக்கின்றது. மேலும், இவ்விடயத்தை தீர்மானிப்பதற்கு சர்வதேச நீதிமன்றத்துக்கு நியாயாதிக்கம் கிடையாது என்ற தனது நிலைப்பாட்டையும் சாலலாந்து தெரிவிக்கின்றது.

சாலலாந்துவினது வாதங்களுடன் நீர் உடன்படுகின்றீரா? பொருத்தமான சட்ட ஏற்பாடுகள் மற்றும் ஏதேனும் வழக்குத் தீர்ப்புகள் இருப்பின் அவற்றுடன் தொடர்புபடுத்தி நுணுக்கமாக ஆராய்க.

4. கீழே விபரிக்கப்படுகின்ற நிலைமைகள் தொடர்பில் குறித்த அரசுகளின் உரிமைகளையும் கடமைகளையும் ஆராய்க. 1982ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் கடல்ச் சட்டம் தொடர்பான சமவாயத்தை எல்லா அரசுகளும் ஏற்றங்கீகரித்துள்ளன என்று கருதிக்கொள்க.

அ. சீட்டா மற்றும் லியோனியா என்பன சவன்னா என்ற சமுத்திரத்தில் அமைந்துள்ள இரண்டு கரையோர நாடுகளாகும். லியோனியாவின் கொடி பறக்கவிடப்பட்டுள்ள ஆய்வுக் கப்பலொன்று அனுமதியின்றி தனது ஆள்புலக்கடலினுள் உட்பிரவேசித் துள்ளதாகவும் நீருக்கடியிலான கடற்படுக்கையில் பொதிக்கப்பெற்றுள்ள கம்பி

வடங்கள் கடுமையாகச் சேதமாக்கப்பட்டுள்ளதாக சீட்டா சாட்டுதல் செய்கின்றது. மேலும், சீட்டாவினது பிரத்தியேக பொருளாதார வலயத்திலிருந்து கப்பல் அழிபாட்டுப் பாகங்கள் சிலவற்றை லியோனியன் கப்பலானது அகற்றிச் சென்றுள்ளதாக சந்தேகம் காணப்படுகின்றது.

ஆ. மோர்டானியா மற்றும் லெஸ்ஸிலாந்து ஆகியன் புலோசியா சமுத்திரத்தில் அமைந்துள்ள கரையோர நாடுகளாகும். காலநிலை மாற்றம் மற்றும் மோசமான வானிலை தொடர்பான தரவுகளைச் சேகரிக்கவும் விநியோகிக்கவும் சமுத்திரப் பரப்பின்மேல் மிதக்கின்ற கிட்டத்தட்ட செயலுறு 3000 கண்காணிப்புக் கருவிகளை நிமோ செயற்திட்டத்தின் மூலம் மோர்டானியா அரசு புலோசியா சமுத்திரத்தில் மிதக்கவிட்டுள்ளன. தமது பிரத்தியேக பொருளாதார வலயத்தினுள்ளும் கண்டமேடை பரப்பினுள்ளும் காணப்படுகின்ற இயற்கை மூலவளங்கள் தொடர்பான பெறுமதியான தகவல்களைச் சேகரிப்பதாகவும் தமது கடற்பரப்பில் அத்தகைய மிதக்கின்ற கருவிகள் காணப்படுவதாகவும் லெஸ்ஸிலாந்து அரசு கவலை கொண்டுள்ளது. நிமோ செயற்திட்டமானது நடைமுறைப்படுத்தப்படுவதனை லெஸ்ஸிலாந்து தடுக்க முடியாது என்பது மோர்டானியாவின் அபிப்பிராயமாகும்.

5. கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களுடன் நீர் உடன்படுகின்றீரா? பொருத்தமான சர்வதேசச் சட்டத் தராதரங்களுடன் தொடர்புபடுத்தி நுணுக்கமாக ஆராய்க.

அ. சமுத்திரங்களில் இராணுவச் செயற்பாடுகள் தொடர்பான சர்ச்சையானது அத்தகைய செயற்பாடுகள், *'சுதந்திரமான கடல்வழிப் பயணம் மற்றும் மேற்பரப்பில் விமானம் பறத்தல், அத்துடன் இத்தகைய சுதந்திரங்களுடன் தொடர்புடையதான சர்வதேச சட்டரீதியான செயற்பாடுகளுக்கு கடற்பரப்பை பயன்படுத்துதல்'* ஆகிய செயற்பாடுகளினுள் உள்ளடங்குமா இல்லையா என்பதிலான உடன்பாடின்மையாலேயே ஏற்பட்டுள்ளது.

ஆ. 'ஆழ்கடலில் ஏதேனுமொரு வெளிநாட்டுக் கப்பலொன்றை போர்க் கப்பலொன்று எதிர்கொள்ளும் போது, குற்றவியல் செயற்பாடுகள் தொடர்பான சந்தேகங்கள் ஏற்படுவதற்கு நியாயமான காரணங்கள் இருப்பின், அவற்றைப் பரிசோதனை செய்யலாம்.'

6. "அசாதாரண உயிரியல் பல்வகைமையைக் கொண்டுள்ளதாகவும் பூகோள இயற்கைச் சூழலுடன் இடைத்தொடர்புடையதான இன்றியமையாததொரு வகிபாகத்தைக் கொண்டுள்ள தாகவும் சமுத்திரமானது இனங்காணப்பட்டுள்ளது. எனினும், சமுத்திரச் சுற்றாடலானது முழுமையற்ற குறைநிரப்பு அமைப்புக்களாலும் பொருத்தனை களினாலும் ஆளப்படுவதுடன், 1982ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் கடல்ச் சட்டம் தொடர்பான சமவாயமானது சுற்றாடல் பாதுகாப்புத் தொடர்பான குறைந்தபட்ச வழிகாட்டிகளை மாத்திரமே வழங்குகின்றது."

சமகால சர்வதேசச் சட்டங்கள் மற்றும் கடல் சுற்றாடல் பாதுகாப்புத் தொடர்பான கோட்பாடுகள் என்பவற்றுடன் தொடர்புபடுத்தி மேலுள்ள கூற்றினை நுணுக்கமாக ஆராய்க.

7. "முழு மனித இனத்தினதும் நன்மைக்காகவே கடல்பரப்பானது ஆய்வு செய்யப்படுதலும் பயன்படுத்தப்படுதலும் வேண்டுமென 1982ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் கடல்ச் சட்டம் தொடர்பான சமவாயத்தில் பங்குபற்றியுள்ள அரசுகளில் பெரும்பாலானவை உறுதி செய்திருந்தன. எனினும், இந்த எதிர்பார்ப்பானது அடைந்துகொள்ள முடியாததாகும் என்பதனை இச்சந்தர்ப்பத்தில் அரசுகள் உணர்ந்துகொண்டுள்ளன."

1982ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் கடல்ச் சட்டம் தொடர்பான சமவாயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கடற்படுக்கைப் பரப்பு தொடர்பான சர்வதேசச் சட்ட மற்றும் நிறுவனக் கட்டமைப்பின் பின்னணியில் நுணுக்கமாக பகுப்பாய்வு செய்க. உமது விடைக்கான அதிகார ஆதாரங்களைச் சுட்டிக்காட்டுக.

**************